सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

Azadi Ka Amrit Mahotsav

G20 भारत 2023 INDIA

மாண்புமிகு துணைநிலை ஆளுநர்

டாக்டர் **தமிழிசை சௌந்தரராஜன்** அவர்கள்

ஆற்றிய

**74**வது

# குடியரசு தின உரை

## 26, சனவரி 2023



மாண்புமிகு **துணைநிலை ஆளுநர்** அவர்களின்

# குடியரசு தின உரை - 2023

***எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய புதுச்சேரி வாழ் மக்களே!***

*“நாமிருக்கும் நாடு நமதென்பது அறிந்தோம்,*
*இது நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்”*

என்ற மகாகவி பாரதியாரின் கூற்றுப்படி, நமது நாட்டு மக்கள் முழு ஜனநாயக உரிமையைப் பெற்று இந்திய நாட்டின் பெருமைக்குரிய குடிமக்களாய் உரிமை சூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாகும். இந்த நன்நாளில் புதுச்சேரி மக்களுக்கும் நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த 74-வது குடியரசு தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், இவ்வேளையில் இத்தகு பெருமைவாய்ந்த ஜனநாயகத்தினை நாம் முழுவதும் அனுபவிக்க, இதற்காக அரும்பாடுபட்ட நமது தேசத் தலைவர்களையும், விடுதலைப் போராட்ட வீரர்களையும் என்றும் நாம் நினைத்துப் போற்ற வேண்டும். உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடான நமது இந்தியத் தேசத்தின் வணங்குதற்குரிய அரசியலமைப்புச் சாசனம் வகுத்துக் கொடுத்த, தலைவர்களின் மாண்புகளையும், கோட்பாடுகளையும் பேணிக்காப்பது நம்முடைய தலையாய கடமையாகும்.

உலகநாடுகள் எல்லாம் நமது இந்தியத் தேசத்தின் வளர்ச்சியினை வியந்து கவனித்து வருகின்றன. பொருளாதாரம், அறிவியல், கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் முன்னிலையில் உள்ள நாடாக மட்டும் அல்லாமல், மரபுகளையும், மாண்புகளையும் போற்றுகின்ற நாடாகவும் நமது தேசம் திகழ்ந்து வருகிறது.

> “*அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்*
> *பெருமை முயற்சி தரும்*”

என்னும் வள்ளுவரின் குறள்வழியில் எவ்வளவு பெரிய அரிதான செயல்களானாலும், அதனைக் கண்டு சோர்வுறாமல் திடமான முயற்சியோடு மேற்கொண்டால் அந்தச் செயல் தக்க பெருமையை

தேடித்தரும். ஜி-20-ன் தலைமைப் பொறுப்பை டிசம்பர் 01, 2022 முதல் நவம்பர் 30, 2023 வரை இந்தியா ஏற்றுள்ளது. இதற்கான சந்திப்புகள் நாடு முழுவதும் பல நிலைகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அத்தகைய சந்திப்பு புதுச்சேரியில் எதிர்வரும் 30-01-2023 அன்று நடைபெற உள்ளது. இது புதுச்சேரிக்கு பெருமை மட்டுமல்ல. நமது பராம்பரியம் மற்றும் கலாச்சாரம், விழுமியங்கள், கலை, கைவினை கலைஞர்களின் திறமை ஆகியவற்றை உலக அளவில் பறைசாற்ற கிடைத்திருக்கும் மிகப்பெரிய வாய்ப்பாகும். இதை, உலக முழுவதும் உள்ள சுற்றுலாப் பயணிகளை மூலதனப்படுத்தி புதுச்சேரியைச் சர்வதேச சுற்றுலாத் தலமாக ஊக்குவிக்கும் வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்வோம்.

மாண்புமிகு பாரதப் பிரதமரின் பொருளாதார ஆலோசனைக்குழு அண்மையில் வெளியிட்டுள்ள “சமூக வளர்ச்சிக் குறியீடு: இந்தியாவின் மாநிலங்கள் மற்றும் மாவட்டங்கள்” என்கிற அறிக்கையின் ஆலோசனைகளை உங்களுடன் பகிர்ந்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தனிமனித சுதந்தரம் மற்றும் தேர்வு, உறைவிடம், நீர் மற்றும் சுகாதாரம் ஆகிய கூறுகளில் குறிப்பிடத்தக்க நிலைகளில் செயலாற்றி உயரிய சமூக வளர்ச்சி தரவரிசையில் 65.89% பெற்று, புதுச்சேரி முதல் மாநிலம்/யூனியன் பிரதேசமாக உயர்ந்துள்ளது.

*“செங்கோல் நடத்துவது உழவனின்*
*ஏரடிக்கும் சிறுகோல்”*

உழவுத் தொழிலே நாட்டு மக்களைச் சிறப்பான வாழ்க்கைக்கு உதவும் தொழில் என்கிறார் கம்பர். அவ்வாறே வேளாண் தொழில் கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் கருதப்படுகிறது. வேளாண் உற்பத்தியை அதிகரித்திட, மானிய விலையில் இடுபொருட்கள் வழங்குதல், வேளாண் தொழில்நுட்பங்களின் பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்குதல் போன்ற பல்வேறுத் திட்டங்களை வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை மூலமாக இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. விவசாயப் பணியாட்களின் பற்றாக்குறையைப் போக்கிட வேளாண்மை இயந்திரமயமாக்கல், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி பரப்பளவை நீட்டிக்கச் செய்தல் போன்ற பல்வேறுத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதுச்சேரி பகுதியில் 2022-23-ஆம் ஆண்டில் நெல் சாகுபடி செய்த பொது விவசாயிகளுக்கான சொர்ணாவாரி சாகுபடி மானியம் 1,097 விவசாயிகளுக்கு ₹ 91.25 இலட்சம், நவரை சாகுபடி மானியம் 1,614 விவசாயிகளுக்கு ₹ 1.39 கோடி, சம்பா

சாகுபடி மானியம் 5,313 விவசாயிகளுக்கு ₹ 4.45 கோடி, கரும்பு உற்பத்தி மானியம் 831 விவசாயிகளுக்கு ₹ 1.88 கோடி வழங்கப்பட்டது.

2022-23 ஆண்டில் ₹ 4.5 இலட்சம் என்ற அளவில் 2,000 இலவச காய்கறி விதைகள் அடங்கிய பைகள் வழங்கப்பட்டன. மேலும், ₹ 22.50 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் மாடித்தோட்டம் அமைப்பதற்காக ₹ 3,000 மதிப்புடைய தோட்டக்கலை கருவிகள் மற்றும் பொருட்கள் 75% மானியத்தில் 1,000 பயனாளிகளுக்கு 2021-2022-ஆம் ஆண்டு வழங்கப்பட்டன.

மத்திய அரசின் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் திட்டங்கள் மூலம் மேலும் 2 பயனாளிகளுக்கு ₹ 4 இலட்சம் மதிப்பிலான உறையாக்கும் இல்லம் அமைத்திட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 12 பயனாளிகளுக்கு புதுச்சேரி பகுதியில் 10 இடங்களிலும், காரைக்கால் பகுதியில் 2 இடங்களிலும், காளான் உற்பத்தி மையங்கள் அமைத்திட ₹ 47.69 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி விற்பனைக்குழு மூலம் 'தேசிய வேளாண் சந்தை' (e-NAM) இணையவழித் திட்டம் சிறப்பாக செயல்படுத்தியமைக்காக மத்திய அரசின் "மாண்புமிகு பாரதப் பிரதமரின் பொது

நிர்வாகத்திற்கான விருது" வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு பாரதப் பிரதமரின் மத்திய அரசு கிராம வளர்ச்சி திட்டத்தின் மூலம் 10,955 விவசாயிகளுக்கு ₹ 13.06 கோடி வழங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி அரசு, விவசாயிகளின் துணை வருமானத்தை அதிகரிக்கும் வகையிலும், புரதச் சத்துமிக்க உணவு உற்பத்தியை பெருக்கும் வகையிலும் கால்நடைகளின் உற்பத்திக்கும், அவற்றின் நலத்திற்கும் முக்கியத்துவம் அளிப்பதில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. மத்திய அரசின் "கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் அமைத்தல் மற்றும் பலப்படுத்துதல்" திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் ஒரு மருத்துவ அவசர ஊர்தி வாங்கப்பட்டு அனைத்து பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு அவசர சிகிச்சை கிடைக்கும் வண்ணம் நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 5,400 கிரிராஜா மற்றும் கிரிராணி சேவல் மற்றும் கோழிகள் 50% மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில் 10,000 வான்கோழிகள் கோழி வளர்ப்போருக்கு வழங்கப்பட உள்ளன.

ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் பல்வேறு நலத்திட்ட நிதி உதவிகள் ஆதிதிராவிட மக்களின் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம் மற்றும் பாரதரத்னா இராஜீவ் காந்தி வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக ₹ 4.00 இலட்சம் மூன்று தவணைகளாக ஒவ்வொரு வீட்டிற்கும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. ஏழை ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பெற்றோர்கள் தங்களின் முதல் இரண்டு மகள்களுக்கு திருமணம் செய்ய ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டு வந்த திருமண உதவித்தொகை தலா ₹ 75,000-லிருந்து தற்போது ₹ 1 இலட்சம் வீதம் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. சமூகத்தில் தீண்டாமையை ஒழிக்க இந்த அரசு இந்து ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் இந்து ஆதிதிராவிடர் அல்லாத தம்பதிகளுக்கு இடையே நடைபெறும் கலப்புத் திருமணத்திற்கு ஊக்கத் தொகையாக ₹ 2.50 இலட்சம் வழங்கப்படுகிறது.

புதுச்சேரி அரசு, சமூக நலத்துறையில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பிரிவானது, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நான்கு பிராந்தியங்களிலும் தனித்துவத்துடன் செயல்பட்டு வருகின்றது. மாற்றுத்திறனாளிகள் இதர நபர்களைப்போல்

சமமான வாய்ப்புகளை பெறுகின்ற அளவில் மேம்படுத்தப்பட்ட குறிக்கோளுடன் உறுதியளிக்கப்பட்ட நலத்திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

மாதாந்திர நிதி உதவி திட்டத்தின்கீழ் 20,224 மாற்றுத்திறனாளிகளின் வயது மற்றும் நிலையினுக்கேற்ப ₹ 2,000 முதல் ₹ 3,800 வரை நிதி உதவியாக வழங்கப்படுகிறது. 2022-23-ஆம் ஆண்டின் மொத்த ஒதுக்கீடான ₹ 63.74 கோடியில் இதுவரை ₹ 46.93 கோடி நிதியுதவியாக மாற்றுத்திறனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 1,053 புதிய பயனாளிகள் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கண்தானத்திற்கான ஊக்கத் தொகையானது, 24 நபர்கள் கண்தானம் செய்ததற்காக ₹ 2.40 லட்சம் அவர்கள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கு ₹ 10,000 வீதம் வழங்கப்பட்டது. இந்த நிதி ஆண்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான எரிபொருள் மானியம் லிட்டருக்கு ₹ 61-ல் இருந்து ₹ 91-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஈமச்சடங்கு நிதி உதவி ₹ 10,000-லிருந்து 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019-ன்படி, 36 திருநங்கைகளுக்கு அடையாள அட்டை மற்றும் அடையாள சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின் மூலம் 'வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பெற்றோரின் மகள் திருமண உதவித் திட்டத்தின்கீழ்' 1,466 பயனாளிகளுக்கு ₹ 25,000 வீதம் ₹ 3,66,50,000 வழங்கப்பட்டுள்ளது. மேலும், 'கணவனை இழந்த ஆதரவற்ற மகளிரின் மகள் திருமண உதவித் திட்டத்தின்கீழ்' 134 பயனாளிகளுக்கு ₹ 25,000 வீதம் மொத்தம் ₹ 33,50,000 வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்வரும் பயனாளிகளுக்கான உதவித் தொகை ₹ 25,000-லிருந்து ₹ 30,000-ஆக உயர்த்தப்பட்டு ஜனவரி 2023 புதுச்சேரி அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வருகிறது. குழந்தைகள் தினம், தேசிய ஒருங்கிணைப்பு வாரம் (ஏக்தா வாரம்) ஆகியவை கொண்டாடப்பட்டுள்ளது. பெண்களுக்கெதிரான வன்முறை எதிர்த்தல் மற்றும் மகளிர் பொதுசேவை மையப் பணிகள் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது.

புதுச்சேரி மாநில கூட்டுறவு வங்கி மூலம் வாடிக்கையாளர்களுக்கு 7.25 சதவிகித வட்டியில் சிறப்பு நகைக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், புதுச்சேரி கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் மூலமாக முத்துப்பிள்ளை பாளையத்தில் 61 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிமுடிக்கப்பட்டு அதில் 40 குடியிருப்புகள் அதன் உறுப்பினர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அனைத்து ஆரம்ப வேளாண்மை கூட்டுறவு சங்கங்களும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு தேசிய டிஜிட்டல் கட்டமைப்பிற்குள் கொண்டு வரப்பட்டு தரவு புதுப்பிப்பதற்கான அனைத்து ஆரம்ப வேலைகளும் நிறைவடைந்துள்ளன. டிராக்டர் வாடகை மானியமாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு ₹ 1.44 கோடி நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் நலனில் நாளும் அக்கறைக் கொண்டு இவ்வரசு செயல்பட்டு வருகிறது. பொருளாதார முன்னேற்றத்தில் மட்டுமல்லாமல் மக்களின் உடல்நலம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றையும் இந்த அரசு கவனத்தோடு கண்காணித்து வருகிறது.

தேசிய சராசரியுடன் ஒப்பிடும்போது மிகக்குறைந்த இறப்பு விகிதத்துடன் ‘கோவிட்-19’ மூன்றாவது அலையை வெற்றிகரமாக புதுச்சேரி அரசு கையாண்டது.

கடந்த மார்ச் மாதம் 2022-ல், காசநோய் பாதிப்பை 40 முதல் 59 விழுக்காடு கட்டுப்படுத்தியமைக்காக வெள்ளிப் பதக்க விருதினையும், தேசிய வாய்வழி சுகாதாரத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தமைக்காக யூனியன் பிரதேச வரிசைப் பட்டியலில் நாட்டிலேயே மூன்றாவது இடத்தையும் பிடித்து நமது புதுச்சேரி மாநிலம் வாகைச் சூடியுள்ளது.

உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில், தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்களுக்கு இந்த அரசு, ‘தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013(NFSA)-ன்’ படி உறுதி செய்துள்ளது. அதன்படி உணவுத் தானியங்களுக்குப் பதிலாக நேரடி பயன் பரிமாற்றம் மூலம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நான்கு பிராந்தியங்களிலும் அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது.

அந்தியோதயா அன்னயோஜனா திட்டப் பயனாளிகளின் குடும்பத்திற்கு 35 கிலோ அரிசிக்கான மானியத் தொகையாக ₹ 1,240-ம் முன்னுரிமை சிகப்பு நிற குடும்ப உணவு பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு 5 கிலோ அரிசிக்கான மானியத்தொகை நபர் ஒருவருக்கு ₹ 177 வீதமும் அட்டைதாரரின் ஆதார் எண் அடிப்படையில் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

கடந்த ஏழு வருடங்களாக தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நேரிடை பயன் பரிமாற்ற முறையானது புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு சராசரியாக, ₹ 12.94 கோடி மாதந்தோறும் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தினால் சராசரியாக 1.62 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் மாதந்தோறும் பயனடைகிறார்கள்.

“யூனியன் பிரதேச இலவச அரிசித் திட்டத்தின்கீழ்” புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மாதந்தோறும் அனைத்து சிகப்பு நிற குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு 20 கிலோ இலவச அரிசிக்குப் பதிலாக பணமாக ₹ 600-ம் அனைத்து மஞ்சள்நிற குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு 10 கிலோ இலவச அரிசிக்குப் பதில் பணமாக ₹ 300-ம் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களின் வங்கிக் கணக்குகளில் நேரிடை பயன் பரிமாற்ற முறையில் ஏப்ரல் மாதத்திலிருந்து நவம்பர் 2022 வரை செலுத்தப்பட்டுள்ளது. இந்த மாநில இலவச அரிசித் திட்டத்தில் இதுவரை ₹ 123.17 கோடி இந்த நிதி ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது. 27-9-2022 அன்று நடைபெற்ற புதுச்சேரி அமைச்சரவை ஒப்புதலின்படி, நியாய விலைக்கடைகளை திறந்து அரிசியாக விநியோகிக்க மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

மேலும், ஏனாம் பகுதியில் கோதாவரி ஆற்றில் கடந்த ஜூலை 2022-ல் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்கு நிவாரண நிதியாக ஒவ்வொரு சிகப்பு நிற குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு ₹ 5,000-மும், ஒவ்வொரு மஞ்சள் நிற குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு ₹ 4,500-ம் வழங்கப்பட்டுள்ளது. ஏனாம் பகுதியில் மழை நிவாரணத் தொகையுடன் 25 கிலோ அரிசிக்கான தொகை ₹ 1,000 ஒவ்வொரு சிகப்பு நிற குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டது. இந்த மழை நிவாரணத்திற்கு நடப்பு நிதி ஆண்டில் ₹ 8.8 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 15,600 குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

“மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் உணவுப் பொருள் வழங்கல் திட்டத்தின் கீழ்” மத்திய அரசால் வழங்கப்பட்ட உணவுத் தானியங்களை தகுதி உடைய சுமார் 1.62 சிகப்பு நிற குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு அனைத்து பகுதிகளிலும் வழங்கப்பட்டுள்ளது.

தீபாவளி சமயத்தில் 10 நாட்களுக்கு தீபாவளி சிறப்பு அங்காடி நடத்தப்பட்டது. மேலும், தீபாவளி பண்டிகையையொட்டி இலவச அரிசி மற்றும் சர்க்கரைக்கு பதிலாக பணம் ₹ 430 அனைத்து குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டது.

இந்திய நாட்டின் 75-ஆம் ஆண்டு சுதந்திரப் பொன்விழாவைக் கொண்டாடும் வகையில் மத்திய கலாச்சார அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி “அமுதப்பெருவிழா” நிகழ்ச்சிகளை கடந்த மார்ச் 2021 முதல் நூற்றுக்கும் மேற்பட்ட கலைக்குழுக்களை பங்கேற்கச் செய்து 1500-க்கும் மேற்பட்ட கலைஞர்களின் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளது. இதற்காக இதுவரை ₹ 50 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இவ்வாறான நிகழ்ச்சிகள் 2023 ஆகஸ்ட் மாதம் வரை நடைபெறவுள்ளது.

மேலும், மத்திய கலாச்சார அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி “வீடுதோறும் கொடியேற்றுவோம்” என்ற இலக்கை “அமுதப்பெருவிழாவின்” கீழ் கொண்டாட கலை மற்றும்

பண்பாட்டுத் துறை 3 இலட்சத்து பத்தாயிரம் தேசிய கொடிகளை கொள்முதல் செய்து அவற்றை முறையாக புதுச்சேரி முழுவதும் விநியோகித்து இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது.

மகான் ஸ்ரீ அரபிந்தோ அவர்களின் 150வது பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் 2022 டிசம்பர் 13-ஆம் தேதி கம்பன் கலை அரங்கத்தில், மாண்புமிகு பாரதப் பிரதமருடன் நேரடி மெய்நிகர் சந்திப்பு நடத்தப்பட்டது. இவ்விழாவின்போது ஸ்ரீ அரபிந்தோவின் உருவம் பொறிக்கப்பட்ட நாணயம் மற்றும் அஞ்சல்தலை வெளியிடப்பட்டது.

"G20" மாநாட்டிற்காக புதுச்சேரிக்கு வருகைத்தர இருக்கும் வெளிநாட்டு பிரமுகர்களை கௌரவப்படுத்தவும் மற்றும் இந்தியாவின் பண்முகத் தன்மை, பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் போன்றவற்றை வெளிப்படுத்தும் விதமாகவும் கலாச்சார நிகழ்ச்சிகள் இத்துறை மூலம் நடத்தப்படவுள்ளது.

புதுச்சேரி அரசு தொழிலாளர் துறை சார்பில் 'அமைப்பு சாரா தொழிலாளர்கள் நலச் சங்கத்தில்' பதிவுப் செய்துள்ள 24,891 உறுப்பினர்களுக்கு 2022-ஆம் ஆண்டின் தீபாவளி ரொக்கப் பரிசாக தலா ₹ 1,000 வீதம் வழங்கப்பட்டது. இதற்காக மொத்தம் ₹ 2,48,91,000 செலவிடப்பட்டுள்ளது.

புதுச்சேரி வேலை வாய்ப்பகம் நடத்திய 'வேலை வாய்ப்பு முகாமில்' புதுச்சேரியைச் சார்ந்த 38 நிறுவனங்கள் பங்கேற்று, 2,650 மாணவ மாணவியர் கலந்து கொண்டதில் 148 மாணவ மாணவியர் பணியாணைப் பெற்றனர். மேலும், காரைக்கால் பகுதியில் 40 நிறுவனங்கள் பங்கேற்று 1,019 மாணவ மாணவியர் கலந்து கொண்டதில் 225 மாணவ மாணவியர் பணியாணைப் பெற்றனர்.

இந்திய அரசின் கல்வி அமைச்சகம் மற்றும் புதுச்சேரி பள்ளிக் கல்வித் துறை ஆகியவை இணைந்து பள்ளி மாணவர்களின் கல்வி, கலைத் திறனை ஊக்குவிக்கும் விதமாக 'கலா உத்சவ்' என்கிற திட்டத்தை உருவாக்கி அதன் வழியாக கலை ஆற்றலை வளர்த்து வருகின்றன. மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் போட்டிகள் நடத்தப்படுகிறது. இதற்காக, 2021-22 ஆம் ஆண்டு 5.18 இலட்சமும் 2022-23 ஆம் ஆண்டு ₹ 6 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 'கேலோ இந்தியா இளைஞர்கள் விளையாட்டு 2021', ஜுன் 2022 அன்று ஹரியானாவில் நடைப்பெற்றது. இதில் 12 வெவ்வேறு தனிநபர் விளையாட்டுப் போட்டியில் 33 தடகள வீரர்களும் 35 தடகள வீராங்கனைகளும் புதுச்சேரி சார்பில் பங்கேற்றனர்.

மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்கள் துவங்கிய "தேசிய சூரிய மின்சார வீட்டு மேற்கூரைத்" திட்டத்தில் இதுவரை மொத்தம் 33 விண்ணப்பங்கள் மத்திய இணையதளத்தில் பெறப்பட்டு அதில் 19 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் புதுச்சேரியில் உள்ள வீட்டு மின்நுகர்வோர்கள் அவர்களது வீட்டு மேல்தளங்களில் 1 கிலோ வாட் முதல் 10 கிலோ வாட்ஸ் வரை சூரிய மின் உற்பத்தி கூரைகள் அமைத்து அவர்களது மின் பயன்பாடு போக மீதமுள்ள சூரிய மின்சக்தியை புதுச்சேரி மின்சாரத் துறைக்கு வழங்கலாம். இதற்காக 3 கிலோ வாட்ஸ் வரை சூரிய மின்சக்தி அமைக்கும்போது 40 சதவிகிதமும் 3 முதல் 10 கிலோ வாட்ஸ் வரை 20 சதவிகிதமும் மத்திய அரசின் மானியம் வழங்கப்படுகிறது.

புதுச்சேரி மின்துறையில் பல்வேறு முதன்மை மின்வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் (நவம்பர் 2022 வரை) 18 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. 39 கிலோ மீட்டர் உயர் மின்அழுத்த மற்றும் குறைந்த மின்னழுத்தப் பாதையும் செயல்படுத்தப்பட்டது. மேலும், 4 உயர் மின்னழுத்தத் தொழிற்சாலைகளுக்கும், 13 குறைந்த மின்னழுத்தத்

தொழிற்சாலைகளுக்கும், 5,978 வீடுகளுக்கும், 963 வர்த்தக நிறுவனங்களுக்கும், 26 வேளாண் பம்பு செட்டுகளுக்கும், 1,225 தெரு மின்விளக்குகளுக்கும், 2,304 LED தெரு மின்விளக்குகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் ‘தூய்மை இந்தியா’ திட்டத்தின்கீழ் கடந்த 2022 டிசம்பர் மாதம் முதல் 2023-ஆம் ஆண்டு நிறைவு வரை 600 தனிநபர் கழிப்பறை கட்ட உத்தேசிக்கப்பட்டு அதில் 156 கழிப்பறைகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. 444 கழிப்பறைகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், மாண்புமிகு பாரதப் பிரமரின் “கிராமப்புற இளைஞர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்” கிராமப்புற ஏழைக்குடும்பங்களின் வருமானத்தில் பன்முகத்தன்மையை சேர்ப்பதற்கும் கிராமப்புற இளைஞர்களின் தொழில் முனைப்பு ஆர்வத்தை பூர்த்தி செய்வதற்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பாரதப் பிரதமரின் ‘கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்’ புதுச்சேரியின் பல்வேறு கிராமப் பகுதிகளின் (சேதராப்பட்டு, ஏம்பலம், உருவையாறு, மணவெளி, பத்துக்கண்ணு) சாலை மேம்பாட்டுப் பணி நடைப்பெற்று வருகிறது.

நபார்டு நிதி உதவியுடன் ₹ 22.40 கோடி மதிப்பீட்டில் காரைக்கால் நகரப் பகுதியில் உள்ள பல்வேறு நகர்புற சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

பொதுமக்களை தீ இடர்பாடுகளில் இருந்து உடனடியாக மீட்கும் பொருட்டு சென்ற ஆண்டில் 578 தீ விபத்து உதவி அழைப்புகளையும், 679 சிறப்பு சேவை அழைப்புகளையும் தீயணைப்புத்துறை நிவர்த்தி செய்துள்ளது.

வனத்துறையின் மூலம் 1,59,091 மரக்கன்றுகள் ஏப்ரல் 2022 முதல் அக்டோபர் 2022 வரை நடப்பட்டுள்ளன. இது சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட அதிகமாகும். நடப்பாண்டில் 15 வன குற்றப்பதிவுகளும், 2 வன விலங்கு குற்றப் பதிவுகளும் பதிவாகி உள்ளன.

புதுச்சேரி மற்றும் காரைக்காலில் உள்ள வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் தலா ஒன்று என இரண்டு வன அறிவியல் மையங்களை நிறுவ புதுச்சேரி அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வன மரபியல் மற்றும் மர வளர்ப்பு நிறுவனம்

மற்றும் புதுச்சேரி அரசு இடையே விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு பணிகள் 2023-24-ஆம் ஆண்டில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மத்திய அரசின் திட்டமான புதிய நகர வன திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், புதுச்சேரி வேளாண் மற்றும் விவசாய நலத்துறை, ₹ 44.00 இலட்சம் மதிப்பீட்டில் 11 ஹெக்டேர் பரப்பளவில் புதுச்சேரி தாவரவியல் பூங்காவை புத்துயிரூட்டுவதற்கும் மேம்படுத்துவதற்கும் வரைவு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுக்கு நடப்பு நிதியாண்டில் அனுப்பப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், மத்திய நிதியுதவி திட்டத்தின்கீழ்-"வனத் தீ தடுப்பு மற்றும் மேலாண்மை ஆண்டு செயல்பாட்டுத் திட்டத்திற்கு" ₹ 214.50 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதில் யூனியன் பிரதேசமான புதுச்சேரியில் வருடாந்திர திட்ட செயல்பாட்டின் கூறுகளை செயல்படுத்த முதல் தவணைத் தொகையாக ₹ 43.40 இலட்சம் விடுவிக்கப்பட்டது. ஊசுடு

கண்காணிப்புக் கோபுரம் மத்திய நிதியுதவி திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்படும். ஊசுடு வனவிலங்கு சரணாலயத்தில் பசுமை சுற்றுலா மேம்படுத்தப்படும்.

புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதியைச் சேர்ந்த 17,836 மீனவக் குடும்பங்களுக்கு 61 நாட்கள் மீன்பிடி தடைகால நிவாரணமாக தலா ₹ 5,500 வீதம் ₹ 9.81 கோடி வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைக்கு கொடையாக ₹ 8.47 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் திட்டமான "பிரதம மந்திரி மத்ஸய சம்பதா யோஜனா திட்டத்தின்கீழ்" மீனவர்களுக்கான காப்பீட்டுத் திட்டம், புதுச்சேரியைச் சார்ந்த 34,200 மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் சார்பில் சமுதாய தன்னார்வலர்களைக் கொண்டு பேரிடர்களை எதிர்கொள்ளும் நோக்கில் "பேரிடர் கால நண்பன்" எண்ணும் திட்டத்தை புதுச்சேரி அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் நோக்கம் மழை, வெள்ளம், பெருவெள்ளம் போன்ற பேரிடர்களுக்குப் பிறகு, மக்களுக்கு உடனடியாகத் தேவையான பணிகளை மேற்கொள்ள தன்னார்வலர்களுக்கு அனைத்து விதமான பயிற்சிகளும் முறையான வல்லுநர்களால் அளிக்கப்படுகிறது.

புதுச்சேரி காவல் துறை சார்பில் ‘சர்வதேச போதை முறைகேடு மற்றும் சட்டவிரோத கடத்தல் எதிர்ப்பு தினம்’ விழிப்புணர்வு பேரணி 26-06-2022 அன்று நடத்தப்பட்டது. விபத்தில்லா சீரான போக்குவரத்திற்கு வழிவகை செய்யும் நோக்கில் சாலை மேம்பாட்டிற்காக ஒருபுற வாகன நிறுத்தம், ஒருவழிப் போக்குவரத்து, புதிய போக்குவரத்து சிக்னல் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மகளிர் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்புக் கருதி பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, அனைத்து காவல் நிலையங்களிலும் பெண்களுக்கென தனி உதவி மேசை அமைக்கப்பட்டுள்ளன.

புதுச்சேரி நில அளவை மற்றும் பதிவேடுகள் இயக்குனரகத்தின் மூலம் புதுச்சேரியைச் சார்ந்த 107 நிலமற்ற ஏழை மக்களுக்கும், காரைக்கால் பகுதியைச் சார்ந்த 42 நிலமற்ற ஏழை மக்களுக்கும் இலவச வீட்டு மனைப்பட்டா “புதுச்சேரி நில மானிய விதிகள் 1975”-ன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்தில் பயணிகள் பாதுகாப்பாக பயணிப்பதற்கு ஏதுவாக “வாகன இயக்க கண்காணிப்பு மையம்” என்கிற கட்டுப்பாட்டு அறை போக்குவரத்துத் துறை வளாகத்தில்

₹ 4.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியுதவி பெண்கள் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும், மத்திய அரசு தரைவழி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் "நிர்பயா" திட்டம் மூலம் பெறப்பட்டுள்ளது. போக்குவரத்துத் துறையானது பெண்களின் நலன் மேம்பாடு மற்றும் பாதுகாப்பிற்காகப் பல்வேறு திட்டங்களை இவ்வரசின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தி வருகிறது. பெண்கள் ஓட்டுநர் உரிமம் பெறுவதை ஊக்கப்படுத்தும் சிறப்பு திட்டமாக ஒவ்வொரு வார சனிக்கிழமைகளில் மகளிர்க்கு பழகுநர் மற்றும் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. பெண்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் பாதுகாப்பான பயணத்தினைக் கருத்தில் கொண்டு மூன்று சக்கர மின்சார வாகன ஓட்டும் பயிற்சியினை இலவசமாக வழங்குவதற்கானத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி சாலைப்போக்குவரத்துக் கழகத்திற்குப் புதிய பேருந்துகள் வாங்கிட ₹ 12 கோடி நிதியினை 2022-23ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இவ்வரசு வழங்கியுள்ளது. இதற்கானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு "பாரதப்பிரதமரின் வீட்டுவசதித் திட்டம்" மூலம் நடப்பு நிதியாண்டின் நவம்பர் 2022 வரை 892 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. பொதுப்பிரிவு/பிற்படுத்தப்பட்டப் பிரிவு

பயனாளிகளுக்கு மாநில அரசின் நிதி உதவியை ₹ 50,000-த்திலிருந்து ₹ 2 இலட்சமாக உயர்த்தப்பட்டு 796 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் இதுவரை ₹ 60.07 கோடி நிதி உதவி இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பாரதப் பிரதமரின் 'பிரதான் மந்திரி முத்ரா யோஜனா' திட்டத்தின்கீழ் 60,346 முத்ரா பயனாளிகளுக்கு ₹ 391.07 கோடி கடன் உதவித் தொகை வழங்கப்பட்டது. மேலும், பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக 2022-23 ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டில் மூலதனம் மற்றும் வருவாய் தலைப்பின்கீழ் ₹ 10,696.61 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார மற்றும் புள்ளிவிவர இயக்ககம், புதுச்சேரி மாநிலத்தின் அனைத்து புள்ளிவிவர பணிகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை திட்டமிடும் தலைமை நிறுவனமாக செயல்படுகிறது. இத்துறையின் கணக்கெடுப்புப்படி புதுச்சேரி மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வருமானம் 2022-23 ஆம் ஆண்டில் ₹ 39,019.14 கோடியாகவும், தனிநபர் ஆண்டு வருமானம் 2022-23 ஆம் ஆண்டில் ₹ 2,44,470 ஆகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

புதுச்சேரி வணிகத் துறையின் நடப்பு நிதியாண்டிற்கான (2022-23) வருவாய் இலக்கு ₹ 3,035 கோடி ஆகும். சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் வரை ஜி.எஸ்.டி. இழப்பீட்டுத் தொகையைச் சேர்த்து ஈட்டிய மொத்த வரி வருவாய் ₹ 2,072.12 கோடி ஆகும். வணிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க நீண்ட காலமாக நிலுவையில் உள்ள வரி பாக்கித்தொகையை வசூலிப்பதற்காக, புதுச்சேரி "நிலுவைத் தொகை தீர்வு செய்தல் திட்டம்" 01-12-2022 முதல் 28-02-2023 வரை மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத்துறை மற்றும் வஃக்பு வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் வரும் 11 திருக்கோயில்களும் மற்றும் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வராத 26 திருக்கோயில்களுக்கும் சீரமைக்கும் பணி மேற்கொள்ள ₹ 2,14,50,000 வழங்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பத் துறையானது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் வழிகாட்டுதலின் திட்டம் மூலமாக "கம்பியில்லா இணைய அணுகலுக்கான வலைக்கட்டமைப்பு இடைமுகம்" மிகப்பெரிய சந்தைகள், பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள், சுற்றுலாத் தலங்கள் உள்ளிட்ட இடங்களில்

அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பொதுமக்கள் தரமான அலைக்கற்றை வசதிகள் குறைந்த பொருட்செலவில் பெற்றுக் கொள்ளலாம்.

"உயரும் இந்நோக்கம் நிறைவுற
இணக்கம் ஒன்றுதான் மார்க்கம்"

என்ற மகாகவி பாரதியாரின் வரிகளின் வழியே நமது மத்திய அரசின் மேலான ஒத்துழைப்போடும் புதுச்சேரி மக்களின் ஒத்துழைப்போடும் இணைந்து இந்த அரசு வளர்ச்சிப் பாதையை நோக்கி வெகுவாக முன்னேறி சென்றுக்கொண்டிருக்கிறது. தேசிய அளவில் நமது புதுச்சேரி தனிச் சிறப்போடு என்றும் திகழும் என்பதில் ஐயமில்லை. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளில் வளர்ச்சியை மட்டுமே நோக்கமாகக் கொள்வோம் என்ற உறுதியோடு அனைவரும் இணைந்து முயற்சிகளைத் தொடர்வோம்.

புதுச்சேரி மக்கள் அனைவருக்கும் எனது குடியரசு தின நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

***நன்றி ! வணக்கம் !!***

***ஜெய்ஹிந்த் !!!***



Raj Nivas, Pondicherry

*Designed and Printed at :* The Government Central Press, Puducherry - 9